**மே - 13**

**"பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்." - 1சாமு 15 : 22.**

நமது பரமபிதா தன்னுடைய வார்த்தையில் நாம் அதிக கவனமுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்றும், நாமே அதில் முன்னேறக் கூடுமென்றோ, அல்லது அவருக்கு நமது கீழ்ப்படிதலின் தகுதியுடைமையை காலங்களும் சூழ்நிலைகளும் மாற்றும் என்றும் ஒரு ஷணமும் நினைக்கக் கூடாது என்றும் அவர் விரும்புகிறார். கர்த்தரின் வார்த்தைக்கு நாம் செவி கொடுத்து, பலன் என்னவாகுமோ என்று பயப்படாமல், ஆனால் நம்மைக் காக்கிறவர் உறங்குகிறதுமில்லை, தூங்குகிறதுமில்லை என்றும் தவறு செய்யக் கூடாதபடி அவ்வளவு ஞானமுள்ளவர்களாயிருக்கிறார் என்றும், நமது கீழ்ப்படிதலின் காரணமாக நம்மேல் வரக்கூடிய ஒவ்வொரு அவசர நிலையையும் உடையவர்களாய் கர்த்தருடைய வார்த்தையின் கிட்டச் சேர்ந்திருப்போமாக. **-Z ’03, 218, 219 (R 3224)**

"பலி" என்றால் நமது மனுஷீகத்தை தேவனுடைய ஊழியத்தில் சாகடிக்கும் போது, நாம் நமது உரிமைகளை வெறுப்பதை குறிக்கும் என்றும் நாம் அறிகிறோம். தேவனுக்கு ஊழியம் செய்ய இருக்கும் என்றும் நாம் அறிகிறோம். தேவனுக்கு ஊழியம் செய்ய இருக்கும் முயற்சிகளிலுள்ள இவ்விதமான சுயவெறுப்பு நமது மனுஷீகத்தை எதிர்த்துப்போட வேண்டியதாயிருந்தாலும், கர்த்தரின் சித்தத்திற்கு எதிராகச் செய்யப்பட்டால் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக இருக்கிறதில்லை கீழ்ப்படியாமையில் சுயவெறுப்பை அப்பியாசிப்பதைவிட கீழ்ப்படியும்போது அது இல்லாமலிருப்பது உத்தமமானது ஆனால், கீழ்ப்படிதலோடு இவ்விதமான பலியை செலுத்தல் மிகவும் உத்தமமாக இருக்கிறது. **- P '26, 61.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

எண் 14:24; 1சாமு 12:22; 1நாளா 28:9,10,20; சங் 40:6; 51:16,17; 69:30,31; நீதி 21:3; பிர 5:1; எசே 9:5-10; ஓசி 6:6; மீகா 6:6-8; மத் 9:13; மாற் 12:32,33; யோவா 12:26; 13:17; 14:15,21; 1யோவா 2:3-6;

**கோபுர வாசிப்பு : Z ’14, 100 (R 5430).**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் கர்த்தருடைய சித்தத்துக்கு இசைவாக அல்லது எதிராக பலி செலுத்துவதிலிருந்து விலகி இருந்தேனா? எந்தச் சந்தர்ப்பங்களில்? ஏன்? எப்படி?